# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்
# O.S. No. 253/2019

2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 09ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திருமதி.சரஸ்வதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **விஜயகுமாரி** | **தொழில்** | : | |
| **கணவர் பெயர்** | : | **பிரபாகரன்** | **கிராமம்** | : | |
| **வயது** | : | | **வட்டம்** | : | **காஞ்சிபுரம்** |
| **நேரம்** | : | **முற்பகல் 12.00** | | : | |

**வா.சா.1 முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும்.

1) கடந்த 10.10.1943 தேதியிட்ட முனியப்ப முதலியர் வகையறா சோமசுந்தர முதலியாருக்கு எழுதிக்காடுத்த கிரய ஆவணததின் சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அந்த கிரய ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) கடந்த 16.08.1977 தேதியிட்ட அழகப்ப முதலியார் மற்றும் அவரது குடும்பத்தினிரிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) கடந்த 26.03.2007 தேதியிட்ட அழகானந்தம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அந்த கிரய ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) கடந்த 09.05.2008 தேதியிட்ட அழகானந்தம் முதலியார் வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) காஞ்சிபுரம் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் வாதி அசல் வழக்கு எண்.150/2018 தாக்கல் செய்து அந்த வழக்கில் கடந்த 14.11.2018 தேதியில் பிறப்பிக்ககப்பட்ட தீர்ப்புரை சான்றளிக்கப்படட நகல் தாக்கல் செய்கிறேன். அந்த தீர்ப்புரையின் சான்றளிக்கப்பட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) கடந்த 06.04.2019 தேதியிட்ட நான் பிரதிவாதியின் மகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன், அந்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) தாவா மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன். அந்த மாதிரி வரைபடம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.